மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : எம்.டி.ஏ. ரூல்களின்படி டிராவலிங் அலவன்ஸ் கொடுக்கப்படுகிறது. அது, கிரேடையும், சம்பளத்தையும் பொறுத்தது.

திரு. ஆர். விஜயரகுநாத தொண்டமான் : தலைவர் அவர்களே, இரண்டு மாதங்களுக்கு முன்பு புதுக்கோட்டையில் தேவஸ்தான ஊழியர்கள் மகாநாடு நடந்தது. அவர்கள் சில கோரிக்கைகளை அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள். அதைப்பற்றி அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்தது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : அரசாங்கத்திற்கு அந்த 'ரெப்ரஸென்டேஷன்' இன்னும் வந்து சேரவில்லை.

திருமதி வி. ப. பழனியம்மாள் : தலைவர் அவர்களே, தேவஸ்தானங்களில் பணிபுரியும் எக்சிகியூடிவ் ஆபீஸர்களின் எண்ணிக்கை தற்பொழுது எவ்வளவு? அவர்களில் தாழ்த்தப்பட்டவர்கள் எத்தனை பேர்கள்?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : தனிக் கேள்வி போட வேண்டும்.

Ennore Thermal Scheme

* 50 Q.—Thiru K. VINAYAKAM : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether the Ennore Thermal Scheme is being undertaken by Madras Electricity Board near Madras City ; and

(*b*) if so, how does this scheme propose to dispose of the fly ash?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்: (அ) ஆம்.

(இ) எண்ணூர் அனல் மின் நிலையத்தில் நாள் ஒன்றுக்கு
முற்பகல் சுமார் 1200–1700 டன் அளவுள்ள சாம்பல் கிடைக்கிறது. மாநில
10–00 வீட்டு வசதி வாரியம் நிறுவவிருக்கிற புழை கற்கலவைத் தொழிற் சாலையில் (Cellular Concrete Factory) பயன்படுத்துவதற்காக இதில் அன்றாடம் சுமார் 300 முதல் 400 டன் வரை சாம்பல் வழங்கவேண்டுமென்று அவ்வாரியம் கேட்டுள்ளது. எஞ்சிய சாம்பலை தாழ்ந்த பகுதிகளில் ஓரளவும் கடலில் ஓரளவுமாகக் கொட்டிவிடக் கருதப்பட்டுள்ளது.

Thiru K. VINAYAKAM : Is not this fly ash which emanates from this Ennore Thermal Station injurious to the public health and was any representation received from the neighbouring people about this and if so, what action is being taken to prevent this kind of fly ash interfering with the public health of the people?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : பல்வேறு அதிகாரிகளையும் கலந்தாலோசித்துத்தான் அப்படியொரு முடிவு எடுக்கப்பட்டது. அந்த முடிவு அமுலாக்கப்படுகிறது.

1969 பிப்ரவரி 24]

திரு. மு. ச. சிவசாமி: தலைவர் அவர்களே, கடலில் கொட்டவிருக்கும் எரி சாம்பலை தனியார் செங்கல் சூளைக்கு உபயோகிக்க இந்தச் சாம்பலைக் கேட்டால், அவர்களுக்குக் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்: அதைப் பற்றிப் பரிசிலிக்கலாம்.

திரு. முனு ஆதி: தலைவர் அவர்களே, இந்த எரி சாம்பல் விவசாயத்திற்கு உபயோகப்படுமா? அது நேரிடையாக இல்லாவிட்டாலும் வேறு ஏதாவது பொருள்களோடு கலந்து விவசாயத்திற்கு என்று வினியோகிக்க, சர்க்காருக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்: அது விவசாயத்திற்குப் பயன்படாது என்பதுதான் இப்பொழுது உள்ள கருத்து.

திரு. பெ. மலைச்சாமி: தலைவர் அவர்களே, இந்த எண்ணூர் அனல் மின்சார திட்டத்திற்கு வெளி நாட்டு உதவிகள் கிடைக்கவில்லை என்று கூறப்படுவது உண்மையா?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்: தனிக் கேள்வி போட்டால் விவரம் கொடுக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

3. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்

(அ) புகளூர் சர்க்கரை ஆலையில் வேலைநிறுத்தம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தராசன் அவர்கள் கீழ்க்கண்ட ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள்:—

"பாரி கம்பெனி நிர்வாகத்தின் கீழ் உள்ள புகளூர் சர்க்கரை ஆலையில் கடந்த ஜனவரி மாதம் 22-ம் தேதியிலிருந்து நடைபெற்றுவரும் வேலை நிறுத்தத்தை சுமுகமாக முடித்து வைப்பதற்கு லேபர் கமிஷனர் தொடர்ந்து எடுத்து வரும் சமரச முயற்சிகளுக்கு மேற்படி பாரி கம்பெனி நிர்வாகிகள் உடன்படாத காரணத்தால் சுமார் 1,000 தொழிலாளர்கள், அந்தப் பிரதேசத்திலுள்ள கரும்பு உற்பத்தியாளர்கள், நூற்றுக்கணக்கான கரும்பு வெட்டும் கூலியாட்கள், கரும்பை ஏற்றிச் செல்லும் வண்டிக்காரர்கள் அனைவரும் ஒருமாத காலத்திற்கு மேல் பாதிக்கப்பட்டுள்ளதோடு, சர்க்கரைக்குத் தட்டு ஏற்பட்டுள்ள இக்காலத்தில், இதுவரை சுமார் 4,200 டன்கள் சர்க்கரை உற்பத்தியும் தடைபட்டுள்ள மோசமான நிலையைக் குறித்து விவாதிக்க இம்மன்றத்தின் நடவடிக்கைகளை ஒத்தி வைக்குமாறு கோருகிறேன்.